RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s-22255

OPEN ACCESS

# பண்டைத் தமிழரின் கோயில் வழிபாட்டு மரபுகள்

**இரா. பமிலா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, தென்திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி, நாகர்க்கோயில், கன்னியாகுமரி-629002, தமிழ்நாடு, இந்தியா

# Temple Worship Traditions of the Ancient Tamils

**R. Bamela** [a, *]

[a] Department of Tamil, South Travancore Hindu Colledge, Nagarcoil, Kanyakumari-629002, Tamil Nadu, India

* Corresponding Author: bamelarajamohan5@gmail.com

Received: 26.09.2022
Revised: 21-10-2022
Accepted: 30-10-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

The people of Tamil Nadu worshipped the deities according to the land in which they lived. The Sangam literature spelled out the worship of God in the lands of Kurinji, Mullai, Marutham, Neithal, and Paalai very well. There is a lot of information in the Sangam literature about the worship of God Muruga. The worship of God Muruga is best described in ancient Tamil texts. The beautiful image of God Muruga is depicted in a mind-blowing way. He who is red in colour like the sun that sprouts in the sea and who has the Kandhal (Gloriosa superba) flower as a symbolic flower wears a Sengadambu (Small Indian Oak) garland on his chest. Thirumal, the land God of Mullai, was worshipped by the Tamil people as a deity and built temples in all the lands. The ancient deity Thirumal is sung when it is said that Tirumal is praised for the glory of Pandyan. The various Gods in the Vedas and the Epics were also worshipped by the Tamil people of the Sangam age. This can be seen in the Kurinji song section titled "The God in Different Forms". It is known from the Sangam texts that Kollippavai is situated in the Kolli Hills, that nothing gets damaged by wind or rain, and that it is a beautiful female form of youth. There are also references to the ways in which people worshipped God Muruga in the Sangam texts. Some of the shrines where there were temples dedicated to God Muruga were famous in ancient times

**Keywords:** Worship, Tamil People, Sangam Age, Sangam Texts, God Muruga

## முன்னுரை

தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் தாங்கள் வாழ்ந்த நிலத்திற்கேற்ப தெய்வங்களை வணங்கினர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை போன்ற நிலங்களுக்குரிய இறைவழிபாட்டைச் சங்க இலக்கியங்கள் மிகச் சிறப்பாக விளக்குகின்றது. வேலவன் அல்லது முருகப் பெருமானை வழிபடுதல் பற்றியச் செய்திகள் சங்க இலக்கியங்களில் ஏராளமாகக் காணக்கிடைக்கின்றன. சங்க இலக்கியங்களில் முருகப்பெருமானின் அழகிய திருவுருவம் மனம் கவரும் விதமாய் வருணிக்கப்படுகிறது. மேலும் முருகப் பெருமானை வழிபட்ட இடங்களின் சிறப்புக்கள் பற்றியச் செய்திகள் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளன.

## குறிஞ்சி முருகன்

முருக வழிபாடு பண்டைத் தமிழ் நூல்களில் சிறப்பாகக் கூறப்படுகிறது. நக்கீரா இயற்றிய திருமுருகாற்றுப்படை முருக வழிபாட்டின் பல்வேறு வகைப்பட்ட முறைகளையும் எடுத்தோதுகிறது.

முருகனின் அழகிய திருவுருவம் மனம் கவரும் விதமாய் வருணிக்கப்படுகிறது. கடலில் முளைக்கும் கதிரவனைப் போன்று செந்நிறமுடையவன், காந்தள் மலரை அடையாளப் பூவாகக் கொண்டவன், செங்கடம்பு மாலையை மார்பில் அணிந்தவன். வேலும் ஏ்கும் அங்குசமும் ஆயுதங்களாகக் கையிலேந்தியவன், சூர் முதல் தடிந்தவன் அரமகளிரால் போற்றப்படுபவன். பரங்குன்றிலும் ஆவிநன்குடியிலும், திருச்சீரலைவாயிலிலும் திருவேரகத்திலும் கோயில் கொண்டு விளங்குபவன், குன்றுகள் தோறும் ஆடி வருபவன். சோலைகள் தோறும் நிற்பவன். இரு மூன்று திருமுகங்களையும் ஆறிரு தடந்தோள்களையும் உடையவன், தெய்வயானையின் தலைவனாகவும் வள்ளியின் கொழுநனாகவும் அமாந்து அருள் செய்பவன், மயிலூர்தியும் சேவற்கொடியும் உடையவன், களிற்றையும் ஆட்டுக் கடாவையும் வாகனமாகக் கொண்டு ஊர்ந்து வருபவன். இரு மூன்று திருமுகங்களில், ஒன்று பல் கதிர் விரித்து இருள் அகற்றுகிறது, ஒன்று ஆர்வலர்களுக்கு வரம் அளிக்கிறது, ஒன்று அந்தணா இயற்றும் வேள்விக்கண் மந்திரங்களை ஓதுகிறது, ஒன்று திங்கள் போல் திசைகளை விளக்குகிறது, போர்க்கள வேள்வியை விரும்புகிறது, ஒன்று வள்ளியோடு பொருந்தி மகிழ்கிறது. ஆறிருதடந்தோள்களில் ஒருகை விண்வழிச் செல்லும் தேவாகளுக்கு அபயம் அளிக்கிறது. மற்றொரு கை மருங்கிலே பொருந்துகிறது. ஒரு கை அங்குசத்தைச் செலுத்துகிறது. மற்றொரு கை தொடையைப் பொருந்துகிறது. ஒரு கை கேடயத்தைத் தாங்க மற்றெhரு கை வேலைப் பிடிக்கிறது. ஒரு கை மார்போடு பொருந்தித் தத்துவங்களை உணர்த்துகிறது. மற்றெhரு கை மாலையோடு சோர்ந்து தாழ்கின்றது. ஒரு கை களவேள்விக்குச் சுழல மற்றொரு கை வீரமணியைஒலிக்கிறது. ஒரு கை மழையைப் பொழிவிக்க மற்றொரு கை தெய்வமகளிர்க்கு மணமாலையைச் சூட்டுகிறது.

## முருகக்கடவுளை வழிபட்ட இடங்கள்

ஊர்கள், வேலன் வெறியாடும் களன்கள், காடுகள், பூங்காக்கள், ஆற்றிடைக் குறைகள்,ஆற்றின் கரைகள், குளத்தின் கரைகள், நாற்சந்திகள், முச்சந்திகள்,கடம்ப மரத்தடிகள், மன்றங்கள் அம்பலங்கள், கந்துடை நிலைகள், மலைமேற் கோயில்கள் ஆகிய இடங்களில் பல்வேறு மக்கள் வழிபட்டனர். குறிஞ்சி நிலத்திற்கு உரியவனான முருகன் எல்லாத் திணை நிலங்களிலும் வழிபடப்பட்டான். குறிஞ்சி நில மக்களான மலைவாழ் குறவாகளும் நானிலங்களுக்கும் உரியோரான நான்மறையாளாகளும் முருகக் கடவுளைத் தாம்தாம் அறிந்த முறைகளிலே வழிபட்டனர் ஊர் விழாக்களில் முருகனுக்கு எதிரில் கோழிக் கொடியினை நிறுத்தி, தினை அரிசியில் மலரைக் கலந்து தூவி ஆட்டுக்கிடாயை அறுத்துப் பலி கொடுத்து வழிபட்டனர், மலை மேலிருந்த கோயில்களில் குறமகளிர் முருகக்கடவுளை வழிபட்டனர். அவர்கள் முதலில் கோழிக் கொடியை அலங்கரித்தனர். கொடிமரத்திலும் பீடத்திலும் வெண்சிறுகடுகை அரைத்து நெய்யோடு சேர்த்து அப்பினர். முருகனுடைய பெயர்களை. மெல்ல உச்சாpத்தனா. நிலத்தில் வீழ்ந்து வணங்கினர். முருகனுடைய திருவடிகளில் கொழுவிய மலர்களைச் சிதறினா மாறுபட்ட நிறங்களில் இரண்டு ஆடைகளை உள்ளும் புறமுமாக அணிந்தனர் சிவந்த நூலைக் கைகளில் காப்பாகக் கட்டிக் கொண்டனா வெண்மையான நெற்பொறிகளை முருகன் திருமுன்னாத் தூவினார். ஆட்டுக்கிடாயை வெட்டி அதன் குருதியை அரிசியில் சோத்துப் பிசைந்து சிறு உருண்டைகளாகத் திரட்டிப் பிரம்புக் கூடைகளில் முருகக் கடவுளுக்குப் பலியிடுவதற்காகச் சேமித்து முன் வைத்தனர் பசுமஞ்சளோடு நறுமணப் பொருள்களை அரைத்து முருகனுக்குப் பூசினர் செவ்வலாப் பூக்களால் தொடுக்கப்பட்ட பொpய மாலையை இரு பக்கத்திலும் இணையாகத் தொங்குமாறு சார்த்தினர். முருகன் கோயில் கொண்டமலையை வாழ்த்திப் பாடினார். அப்போது நறுமணம் மிக்க தூபங்களைக் காட்டினா. அவ்வாறு தூவும்போது குறிஞ்சிப் பண்ணில் பாட்டுக்களை இசைத்தனர், முருகன் உவக்கும் பல்வேறு வாத்தியங்களையும் இசைத்தனா. சிவந்த நிறத்தையுடைய மலாகளைத். தூவி வழிபட்டனர். அப்போது குருதியால் அளைந்த செந்தினையைப் பரப்பி முருகனுக்குப் படைத்தனர் தெய்வம் இல்லை என்று மாறுபட்டுக் கூறினவாகளும் அஞ்சும் படியாக ஆங்கே குறமகளிர் முருகனை ஆற்றுப்படுத்தினாமுருகனும் அவர்களிடத்தே ஆவேசித்து தெய்வத்தன்மையைக் காட்டினான். இனி,வெறியாடு களங்களிலும் நால்திசைகளிலும் எதிர் ஒலிக்கும்படி முருகனைப் புகழ்ந்து பாடினர். அப்போது கொம்புகள் பலவற்றை ஒரே சமயத்தில் ஊதினர். பெரிய. மணிகளை அடித்து ஓசை

எழுப்பினர். முருகனுடைய பட்டத்து யானையான பிணிமுகத்தை வாயாராப் புகழ்ந்தனர். தாங்கள் வேண்டுவனவற்றைக் கூறி வழிபட்டனர்.

## முருகனின் படை வீடுகள்

முருகவழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்தது. முருகனுக்குரிய கடம்பமரத்தையும் சேவலையும் வேற்கருவியையும் பண்டைத் தமிழர் வணங்கி வழிபட்டனர். கி.மு. நாலாயிரத்துக்கும் முற்பட்டதான ஆதிச்சநல்லூர் நாகரிகத்தில் இரும்பு வேல்களும் பித்தளைச் சேவல்களும் அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ளவை இதனை வலியுறுத்துகிறது. முருகனுக்குத் தனியான கோட்டங்கள் அமைத்து வணங்கியதும் சங்க நூல்களால் அறியப்படுகிறது. “அணங்குடை முருகன் கோட்டம்” என்று முருகனுக்கு எடுத்திருந்த ஆலயம் குறிப்பிடப்பட்டிருந்தது. இதுபோக முருகனுடைய ஆயுதமான வேலுக்குக் கோட்டம் எடுத்து வழிபட்டதும் நிலவியிருந்தது. புகார் நகரத்தில் இவ்வாறு “வேற்கோட்டம்” இருந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. முருகனுக்குரிய கோயில்கள் நிலவிய தலங்கள் சில பண்டைக்காலத்தில் புகழ் பெற்று விளங்கின. அவற்றுள் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவிநன்குடி, திருவேரகம் என்பன மிக்க புகழ் பெற்று நக்கீரரால் திருமுருகாற்றுப்படையில் சிறப்பிக்கப் பெற்றவையாகும். தனித்தலங்களான இந்த நான்கினையும் தவிர முருகக் கடவுள் குன்றுகள் தோறும் ஆடிவருவதாகவும் பழங்கள் முதிர்கின்ற சோலைகள் தோறும் உரியோனாகி நிற்பதாகவும் நக்கீரர் குறிப்பிடுகிறர். இந்த ஆறு இடங்களிலே மட்டுமன்றிக் காடு, துருத்தி போன்ற இடங்களிலும் அவன் உறைபவன் என்றும் அவா புலப்படுத்துகிறர் (Parimanam, Balasubramaniyam, 2004).

## ஆற்றுப்படுத்துதல்

ஆற்றுப்படுத்தல் என்ற தொழிற்பெயர் ஆற்றுப்படை என்று ஆகி நூலுக்குப் பெயராயிற்று. முருகக் கடவுளிடத்து வீடு பெறுவதற்குப் பக்குவமான ஒரு புலவனை ஆற்றுப்படுத்தும் மேன்மையுடைய நூல் திருமுருகாற்றுப்படை ஆகும். முருகன் எழுந்தருளியிருக்கும் பல்வேறு தலங்களையும் இயற்கையிடங்களையும் சுட்டிக்காட்டி முருகனை ஏத்தும் முறைகளையும் நக்கீரா, குறிப்பிட்டிருக்கிறர்.முருகனுடைய திருவருளை வேண்டுவோர் இன்றும் இந்நூலை நியமத்துடன் ஓதி வருகின்றனர். ஆற்றுப்படை என்பது ஆறு ரூ படை என்று தவறகப் பிரிக்கப்பட்டு முருகனுடைய ஆறு படைவீடுகளை வருணிக்கும் நூலாகக் கருதும் மரபு பிற்காலத்தில் தோன்றிவிட்டது. அருணகிரியாரும் “அறுபதிகளில் அமர்போனே” “அறுதிருப்பதிதனில்” என்று வழங்குகிறhர். குமரகுருபரரும் “ஆறுதிருப்பதிகண்டு” என்றே பாடியிருக்கிறர். ஆறுபடைவீடு என்ற பெயர் எக்காலத்தில் தோன்றியது என்று அறியக்கூடவில்லை. ஆயினும் பெரும்பான்மையாக மக்களிடையே வழங்கத்தொடங்கிற்று.

## அறுபடைவீடுகள்

ஆறுபடை வீடுகள் என்ற எண்ணிக்கை முறையைத் தவறhன முடிவு என்று ஆராய்ச்சியாளாகளான மா. இராசமாணிக்கனாரும் (பத்துப்பாட்டு ஆராய்ச்சி), மொ.அ. துரை அரங்கசாமியும் (அன்புநெறியே தமிழர்நெறி) மற்றும் உரைவேந்தர். அவ்வை சு. துரைசாமிப்பிள்ளை போன்ற அறிஞர்களும் குறிப்பிட்டிருக்கின்றனர். வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் திருச்செந்தூரே முதற்படைவீடு என்று கொள்கிறhர். முருகப்பெருமான் திருச்செந்தூரில் முதலில் வந்து தங்கி வீரபாகுவை சூரனிடம் தூதனுப்பினார். போரில் வென்றர். அதன் காரணமாகத் திருப்பரங்கிரியில் தெய்வயானையோடு திருமணம் நடந்தது. நக்கீராகுகையில் அடைபட்டுத் துதித்த போது முருகன் வேலாயுதத்தால் மலைக்குகையையும் கற்கிமுகி என்ற பேயையும் அழித்தார். அதனால் நக்கீரா தமக்கு அருள்செய்த இடமான திருப்பரங்குன்றத்தை முதலில் கூறினார். ஆயினும் முருகன் முதலாவதாகத் தங்கிய இடம் திருச்செந்தூரே என்பர். திருமுருகாற்றுப்படை குறிப்பிடும் திருவேரகம் இக்காலத்தில் சுவாமிமலை என்ற கட்டுமலைத் தலமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. பண்டைய உரையாசிரியரான நச்சினார்க்கினியா திருவேரகம் என்பது மலைநாட்டின்கண் உள்ள ஓர் திருப்பதியாகவே

கொண்டிருந்தார். திருவேரகத்தில் முருகக் கடவுளை பிரம்மசாரிகளான பிராமணர்கள் ஈரம்புலராத ஆடையை அது தாமாகவே உலரும்படி அணிந்து கொண்டு கைகளை உச்சிமேல் குவித்துக் கொண்டே "நம - குமாராய" என்ற ஆறு எழுத்து மந்திரத்தை உச்சரித்து நறுமணமிக்க மலர்களைத் தூவி அர்ச்சித்து வழிபாடு செய்வதாக நக்கீரர் குறிப்பிடுகிறர். இன்றும் மலைநாட்டுத் தலங்களில் இவ்வாறே ஈரம் புலராத ஆடையணிந்து நம்பூதிரி அல்லது போற்றிமார்கள் கருவறைவிட்டுப் பெயராது வழிபாடுகள் செய்து வருவதைக் காணலாம். தமிழ் லெக்சிகனில் ஏரகம் என்பதற்கு தென் கன்னடத்திலுள்ள உடுப்பியை எடுத்துக்காட்டியிருக்கிறது. இன்றும் உடுப்பியில் புகழ்ப்பெற்ற சுப்பிரமணிய சுவாமி ஆலயம் ஒன்று விளங்கி வருகிறது. பரணீதரன் தம்முடைய புனிதப்பயணம் என்ற நூலில் இத்தலத்தை நேரில் சென்று கண்டு விரிவாக எழுதியிருக்கிறர். நச்சினார்க்கினியா காலத்திற்குப் பிறகு கி.பி. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான அருணகிரியார் காலத்திலிருந்து சுவாமிமலையே திருவேரகமாகக் கொள்ளப்பட்டிருக்கலாம். "ஏரகவெற்பெனும் அற்புதமிக்க சுவாமி மலைப்பதி" என்று அவர் கூறியிருக்கிறhர். சுவாமி மலையில் பிரணவப் பொருளை முருகன் சிவபெருமானுக்கு ஓதியருளினார் என்பர். அதனாலே தான் "சுவாமிமலை" என்ற பெயர் ஏற்பட்டது. இத்திருப்பதியைத் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழில் "அரியமறை புகலும் ஏரகமும்" என்று குறிப்பிட்டிருக்கிறது. திருவேரகம் திருத்தலத்தைப் பற்றி நன்கு ஆய்வுசெய்த மா. இராசமாணிக்கனாரும் தாமெழுதிய "பத்துப்பாட்டு ஆராய்ச்சி" என்ற நூலில் மேற்குறித்த கருத்துக்களையே வலியுறுத்துகிறர் (Iraasamaanikkanaar, 2012). சிலப்பதிகாரத்திலிருந்து முருகன் எழுந்தருளியிருந்த வேறுசில பண்டைப்பதிகளையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. திருச்செந்தூர், திருச்செங்கோடு, வெண்குன்றம், திருவேரகம் என்ற நான்கு தலங்கள் குறிப்பிடப்படுகின்றன. வெண்குன்றமே சுவாமிமலை என்று அரும்பதவுரையாசிரியா கருதுகிறhர். இவ்வாறு முருகப்பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளிய தலங்கள் பலவும் சங்க காலத்தைச் சோந்தவை என்று அறியப்படுகின்றன. ஆயினும் அவற்றுள் ஆறு தலங்களைச் சிறப்பாகக் கொண்டு வழிபடுவதற்குத் திருமுருகாற்றுப்படையைப் பிற்காலத்தில் பிரமாணமாகக் கொண்டார்கள். தேவசேனாதிபதியாகிய முருகன் நிற்கும் இடங்கள் யாவுமே படைவீடுகள் என்று சொல்லத்தகும். அவற்றுள் ஆற்றுப்படை வீடுகள் என்பவை திருமுருகாற்றுப்படையில் நக்கீரரால் பாடப்பட்ட தலங்களாகும். அவற்றுள் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம் என்பன தனித்தலங்களாகும். குன்று தோறாடல், பழமுதிர்சோலை என்பன பொதுவாகக் குன்றுகளையும் சோலைகளையும் குறிப்பனவாகும். "பழமுதிர்சோலை மலைகிழவோனே" என்பதைக் கொண்டு அவ்வாறு பெயர் அமைந்த தலமொன்று தனியாக இருக்க வேண்டும் என்று நினைக்க இடமுண்டு. பாரிபாடலிலும் சிலப்பதிகாரத்திலும் திருமால் குன்றமாகக் குறிப்பிடப்பெற்றும் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்றும் விளங்குகின்ற திருமாலிருஞ் சோலையே முருகனுடைய பழமுதிர்சோலை என்று அருணகிரிநாதர் காலத்திலிருந்து ஒரு கருத்து உருவாகியது. அழகாமலைக் கல்வெட்டுக்கள் ஒன்றிலும் முருகன் கோயில் இருந்ததைக் குறிக்கவில்லை. ஆராய்ச்சிப் பேரறிஞர் டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் கருத்தே நடுநிலையாளகளால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமைகிறது. அவருடைய கருத்தாவது, "பழமுதிர்சோலை மலை" என ஒரு மலை முருகனுக்கு உரியது என்பதற்கோ, அம்மலை அழகாமலையே என்பதற்கோ,அங்கு முருகன் கோயில் இருந்தது என்பதற்கோ சங்க நூல்களிலும் இடைக்காலக் கல்வெட்டுக்களிலும் சான்று இல்லை. தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடான வாழ்வியற்களஞ்சியம் - தொகுதி (2) என்ற பகுதியில், ஆறுபடை வீடுகள் என்ற கருத்தும் வரலாற்று அடிப்படையில் ஆனதன்று. மக்களின் நம்பிக்கையிற் பிறந்ததாகும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. "தமிழ்நாட்டில் முருகன் திருப்பதிகள் சங்க காலத்திலும் நிறைய இருந்தன. ஆனால் ஆறுபடை வீடு என்பது மக்களிடையே பிறந்த நம்பிக்கை தான். வரலாற்று உண்மையன்று" என்று முனைவர் தொ. பரமசிவன் தம்முடைய அழகர்கோயில் ஆய்வேட்டின் இறுதியில் முடிவு செய்துள்ளார் (Paramasivam, 1989).

## முல்லைத் திருமால்

முல்லை நிலக்கடவுளான திருமாலைத் தமிழ்ப் பெருமக்கள் பெருந்தெய்வமாக் கொண்டு எல்லா நிலங்களிலும் கோயில் எழுப்பி வழிபட்டனர். பாண்டியனின் சிறப்பின் பொருட்டுத்திருமாலைத்

துதிப்போம் என்று கூறும்போது திருமால் தொன்மையான தெய்வம் என்று திகிரியைத் தாத்தவன் என்றும் பாடப்படுகிறது. இதிலிருந்து, நேமிப்படை ஏந்திய பரம்பொருள் திருமாலே என்று கொண்டனர் தமிழர். திருமாலைத் தெய்வமால் என்றும் தேயாவிழுப்புகழ்த் தெய்வம் என்றும் போற்றினர். மாயோனாகிய கண்ணபிரான் கேசி என்ற அசுரனைக் கொன்றது, கம்ச சபையில் சாணூர முஷ்டிககளான மல்லகளை அட்டது, பகைவா, ஏவிய யானையின் நெற்றியில் சக்கரப்படையை எறிந்து கொன்றது.சந்திரனைப் பாம்பின் பிடியிலிருந்து விடுவித்தது ஆகிய சாpத்திரங்களைக் கலித்தொகை குறிப்பிடுகிறது. இவற்றில் யானையைச் சக்கரப்படை கொண்டு கொன்ற வரலாறு எந்தப் புராணத்தில் வருகிறது என்று அறியப்படவில்லை. சந்திரனைப் பாம்பினின்று விடுவித்த வரலாற்றை ஆழ்வார்களும் பாடியுள்ளனா. “மதிகோள் விடுத்தாய்” என்று திருமழிசையாழ்வாராலும் “பனிசோ விசும்பில் பான்மதிக்கோள் விடுத்தானிடம்” என்று திருமங்கையாழ்வாராலும் பாடப்பட்டுள்ளது. இச்செய்தியும் எந்தப் புராணத்தில் வருகிறது என்று அறியப்படவில்லை. தக்ஷமுனிவரால் சந்திரனுக்குச் சாபம் ஏற்பட்டு க்ஷயரோகம் நோந்ததாகவும் பிறகு சந்திரன் திருவரங்கம் சென்று சந்திர புஷ்காணியில் நீராடிப் புன்னை மரத்தடியில் வீற்றிருந்து தவமியற்றித் திருவரங்கப் பெருமானுடைய திருவருளால் நோய் நீங்கியதாகவும் ரங்கமஹாhத்மியத்தால் அறியலாம். புறநானூறு 174-வது பாடலில் மேலும் ஓர் அரிய புராணச் செய்தி திருமாலைப் பற்றியதாக இடம் பெறுகிறது (Swaminatha Iyer, 1894). தேவாசுர யுத்தத்தில் இரவில் பலமுடைய அசுரா பகலிலும் பலம் பெற்றுத் தாங்கள் வெற்றிபெறுவதற்காகச் சூரியனை ஒளித்து விட, அதனால் உலகம் அடைந்த துன்பத்தைப் போக்கத் திருமால் சூரியனை மீட்டு வந்து அளித்த கதை பேசப்பட்டிருக்கிறது .

## பல்வேறு கடவுளர்

வேதங்களிலும் இதிகாசப் புராணங்களிலும் இடம்பெறும் பல்வகைக் கடவுளரும் சங்ககாலத் தமிழ்க் குடியினரால் வழிபடப்பட்டனர் “வேறுபல் உருவின் கடவுட் பேணி” என்ற குறிஞ்சிப் பாட்டுப் பகுதியால் இதனை அறிய முடிகிறது. இவர்களிற் சிலரை திருமுருகாற்றுப்படை பெயர் குறித்து வழங்குகிறது. இந்திரன், எமன், வருணன், குபேரன் ஆகியோர் நாற்பெருந்தெய்வம் என்று குறிக்கப்பட்ட திசைக்கடவுளர் ஆவர் (Kathir Murugu, 2016). அரி அயன் அரன் என்ற மூவரையும் “பலர் புகழ் மூவா” என்பர் நக்கீரர் மேலும் நால்வேறு இயற்கையினரான முப்பத்துமூவர் தேவகணங்களும் வழிபடப்பட்டனா. அவாகள் அஷ்டவசுக்கள், ஏகாதச உருத்திரர், துவாதச ஆதித்தியர், அசுவிநீ தேவரிருவர் என்பேராவர். இவர்களையே எண்மர் பதினொருவர் ஈரறுவர் ஓரிருவர் என்று தொகைப்படுத்தி வழங்குவர் இவர்களைத் தவிர பதினெண் தேவகணங்கள் வழிபாடு பெற்றனர் அவாகள் தேவர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், கிம்புருடர், யக்ஷர், வித்தியாதரர், ராக்ஷஸர், கந்தருவர், சித்தர், சாரணர், பூதர், பைசாசர், நட்சத்திரங்கள், நாகர், ஆகாயவாசிகள், போகபூமியர், என்று புராணங்கள் வாயிலாக அறியலாம். இவர்களில் சிலருடைய பிறப்புகளையும், இயல்புகளையும் உருவங்களையும் பற்றியச் செய்திகளை வியாசபாரதத்தில் காணலாம். சங்ககாலத்தில் திருமகள் நிலமகள், மலைமகள், கலைமகள், தெய்வயானை, வள்ளி, காளி, ஆகிய பெண் கடவுளரும் வழிபாடு பெற்று வந்தனர், பிரம்மதேவனின் வழிபாடும் ஓரளவுநிலவியிருந்தது. பிரம்மன் திருமாலின் உந்தித் தாமரையில் பிறந்தான் என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது (Kathir Murugu, 2016).

## சிறுதெய்வங்களும் கிராம தேவதைகளும்

கொல்லிப்பாவை, கொல்லிமலையில் உள்ளது என்பதும் காற்றினாலும் மழையினாலும் ஊறுபாடு எதுவும் அடையாது என்பதும் அழகிய பெண் வடிவு கொண்ட பதுமை என்பதும் சங்கநூல்களால் அறியப்படுகிறது. ஒரு காலத்தில் திருமகள் தன்முன் போர்க்கெழுந்த அவுணர் மூர்ச்சையுற்று விழும்படி இக்கொல்லிப்பாவையின் உருக்கொண்டு ஆடினள் என்று சிலப்பதிகாரம் கூறும். திருமங்கையாழ்வார் இக்கொல்லிப்பாவையைத் தம் பெரியார் திருமொழிப் பாசுரத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வாறு சங்கநூல்களை ஆராய்ந்தால் தமிழ்க்குடியினர் வழிபட்டு வந்த கடவுளர் தொகையை நன்கு அறியமுடிகிறது.

## முடிவுரை

அழகிய திருவுருவம் கொண்ட முருகப்பெருமானை வழிபட்டச் செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. பண்டைத் தமிழர்கள் முருகப்பெருமானை வழிபட்ட இடங்களின் பெருமைகளும், சிறப்புகளும் சங்க நூல்களில் காணப்படுகிறது. முருகப்பெருமானை மக்கள் வழிபட்ட முறைகள் பற்றியக் குறிப்புகளும் சங்க நூல்களில் காணக்கிடைக்கின்றன. முருகனுக்குரிய கோயில்கள் நிலவிய சில திருத்தலங்கள் பண்டைக் காலத்தில் புகழ்பெற்று விளங்கின. முருகக் கடவுளுடைய பிறப்புச் செய்திகள் வடமொழிப் புராணங்களைத் தழுவி சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளன. வேதங்களிலும், இதிகாசங்களிலும் இடம் பெறும் பல்வகைக் கடவுளரும் சங்க கால தமிழ்க்குடியினரால் வழிபடப்பட்டனர்.

## References

Iraasamaanikkanaar, M. (2012) Paththupaattu Aaraaychi, Sahitya Akademi, Chennai, India

Kathir Murugu, (2016) Pathupattu moolamum uraiyum, Saratha Pathippagam, Chennai, India.

Paramasivam, T. (1989) Alagar Kovil, Madurai Kamarajar University, Madurai, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V. (2004) Natrinai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Swaminatha Iyer, U.V. (1894) Puranaanooru Pathippum Uraiyum, U.Ve.Sa Library, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License